# இயேசுவை நோக்கி



## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# அனுதினமும் அடிக்கடி நீங்கள் செய்ய வேண்டிய ஜெபம்

நிலைவரமான ஆவியை என்
உள்ளத்திலே புதுப்பியும்.

உற்சாகமான ஆவி என்னைத்
தாங்கும்படி செய்யும்.

கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படி
என்னை உயிர்ப்பியும்.

உத்தம நிதானிப்பையும் அறிவையும்
எனக்குப் போதித்தருளும்

நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்.

உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குப் போதித்தருளும்.

*சங்கீதம் 51 :10, 12;*
*119 :25, 66; 143 :8,10*



# இயேசுவை நோக்கி

கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கத்தையும், திட்டத்தையும், நிறைவையும் **'இயேசுவை நோக்கி'** என்ற 2 வார்த்தைகளும் விளக்குகின்றன.

**கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன** என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்பி, அவரைச் சார்ந்து வாழும் வாழ்க்கை, கிறிஸ்தவ வாழ்க்கை ஆகும். கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் திட்டவட்டமான ஓர் ஆரம்பம் உண்டு. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்தை விளக்கும் முக்கியமான **3 உண்மைகளைக்** கீழே எழுதியிருக்கிறேன்.

1. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல்
2. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்.
3. மனந்திரும்புதல்.

நீங்கள் இந்த உண்மைகளைப் பற்றி ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

நீங்கள் இயேசுவை நோக்கி வர அழைக்கப்படுகிறீர்கள். இயேசுவை நோக்கித் தொடரும் பாதையில், பயணத்தில் செல்லும்போது கவனிக்க வேண்டியவைகளை தொடர்ந்து வாசியுங்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்காக, உங்கள் பாவங்களுக்காகச் சிலுவையில் பாடுபட்டு , இரத்தம் சிந்தி, மரித்தார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

நீங்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா?

நீங்கள் மனந்திரும்பியிருக்கிறீர்களா?

இந்த 3 கேள்விகளுக்கும் நீங்கள் ஆம் என்று திட்டவட்டமாகப் பதில் சொல்ல முடியும் என்றால் நீங்கள் **'கிறிஸ்தவ வாழ்க்கை'** என்ற புதிய பாதையில் நடக்க ஆரம்பித்திருக்கிறீர்கள் என்று பொருள். இந்தப் புதிய பாதையில் ஒவ்வொரு அடியும் முக்கியம். திருப்பங்கள் இருந்தாலும், உங்களை அழைத்தவர் இயேசு. அவரே உங்களை நடத்துவார்.

# இயேசுவை நோக்கி...

- கிறிஸ்தவ வாழ்க்கை...ஒரு பயணம் !
- ஒரு பந்தயம் !
- இயேசு யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் என்ன செய்தார்?
- இயேசுவின் மரணம்
- இயேசுவின் உயிர்த்தெழுதல்
- இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார்!
- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஈடு இணையற்றவர்!
- நீங்கள் யார்?
- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறவர்கள் விட்டுவிட வேண்டியவைகள்.
- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறவர்கள் செய்ய வேண்டியவைகள்.
- முக்கியமான ஆலோசனைகள்!

## கிறிஸ்தவ வாழ்க்கை - ஒரு பயணம்!

கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு பயணத்தைப் போன்றது. ஓரிடத்திற்குப் பிரயாணப்பட்டுச் செல்வதற்கு முன்பாக பலவித ஆயத்தங்களைச் செய்கிறோம். ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது நேரத்தில் பிரயாணத்தை ஆரம்பிக்கிறோம். எங்கு செல்கிறோம், எதற்காகச் செல்கிறோம் என்று தெளிவாக அறிந்திருக்கிறோம். இதைப்போல் தான் கிறிஸ்தவ வாழ்க்கையும் அமைந்திருக்கிறது. ஒரே ஒரு பெரிய வித்தியாசமுண்டு! சாதாரணமாக நாம் ஓர் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி விடுவோம். ஆனால் *கிறிஸ்தவ வாழ்க்கை மீண்டும்* புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வராத, பின்னிட்டுப் பாராத, பரலோகத்தை நோக்கிய முன்னேறிச் செல்கிற ஒரு **புனிதமான பயணமாகும்.**

**இயேசுவை நோக்கி நீங்கள் புறப்பட்டு விட்டீர்களா?** அவரை நோக்கி நாம் செல்லும் பிரயாணத்தில் அவர் நமக்குள்ளிருக்கிறார்; நம்முடன் இருக்கிறார்; நமக்கு முன்பாக இருக்கிறார். பயணம் செய்யும்போது சுமைகள் குறைவாய் இருந்தால் பயணம் இனிதாய் இருக்கும் என்று சொல்லுவார்கள். கிறிஸ்தவ வாழ்க்கை என்ற பயணத்தைத் தொடரும் போது பாவமானவற்றையும், பாரமான வற்றையும் தவிர்த்து பயணத்தைத் தொடரவேண்டும். (எபிரெயர் 12 : 1)



## கிறிஸ்தவ வாழ்க்கை - ஒரு பந்தயம்!

ஓட்டப்பந்தயங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இரண்டு விதமான பந்தயங்கள் உண்டு.

1. நூறு மீட்டர் போன்ற குறுகிய தூரத்தை மிக வேகமாக ஓடி முடிப்பது.
2. நீண்ட தூர ஓட்டப் பந்தயத்தை விடாமுயற்சியுடன் ஓடி முடிப்பது.

கிறிஸ்தவ வாழ்க்கை நீண்டதூர ஓட்டப் பந்தயத்தைப் போன்றது. பந்தயம் ஓடுவதற்கான இடத்தில்தான் ஓட வேண்டும். பந்தய ஓட்டத்திற்கான நேரத்தில்தான் ஓட வேண்டும். பந்தய விதிகளின்படிதான் ஓட வேண்டும். பந்தயத்திற்கான பரிசு உண்டு. ஓட்டப் பந்தயத்தில் போட்டி உண்டு.

ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் போட்டி இல்லை. கிறிஸ்து தான் நம்முடைய பந்தயத்தின் இலக்கு ஆவார். அவர் தான் நமக்கு பரிசாகக் கிடைப்பவர்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்ற பந்தயத்தில் ஓட ஆரம்பித்துவிட்டீர்களா? ஓடிக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி ஓடுகிறீர்கள்? இயேசுவை நோக்கி ஓடுங்கள். இயேசுவை நோக்கி கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடருங்கள்.

ஒரு நாள் பந்தய ஓட்டத்தில் பங்குபெற ஒவ்வொருநாளும் முயற்சி எடுத்தல் அவசியம். கிறிஸ்தவ வாழ்க்கை என்ற பந்தயத்தில் ஒவ்வொருநாளும் ஓட கட்டுப்பாடும், ஒழுங்கும், தியானப் பயிற்சியும் தேவை. பந்தயத்தில் ஓடும்போது எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் முக்கியம். அப்படியே கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு தீர்மானமும் முக்கியம். தீர்மானங்களில் வெற்றிபெற கிறிஸ்துவைச் சார்ந்துகொள்ள வேண்டியது அதைவிட முக்கியம்.

ஓட்டத்தில் பங்குபெற தகுதி தேவை; பயிற்சி தேவை. வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கம் தேவை. பந்தயத்தில் ஒவ்வொரு வெற்றியிலும் உற்சாகம் அடைகிறோம். தோல்விகள் தவிர்க்க முடியாதவை; ஆனால் கற்றுக்கொள்ள சிறந்த வாய்ப்புகளாக அமைந்துள்ளன. தோல்வி மனப்பான்மையைத் தவிர்க்க வேண்டும். வெற்றி பெறும்போது பெருமைப்பட்டால் அது தவறுவதற்கு வழிவகுக்கும். கிறிஸ்தவ வாழ்க்கையும் அதைப் போலத்தான்.

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். - II தீமோத்தேயு 4 : 7



# இயேசு கிறிஸ்து...

- பரத்திலிருந்து வந்தார்.
- பாவிகளை நேசிக்கிறார்.
- பாவத்தை வெறுக்கிறார்.
- பரிசுத்தத்தை விரும்புகிறார்.
- உங்களுக்காக அவர் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்து, உயிரோடு எழும்பினார்.
- உங்கள் பாவங்களை மன்னிக்கிறார்.
- உங்களுக்குள் பரிசுத்த தன்மையை உருவாக்குகிறார்.



## இயேசு யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் என்ன செய்தார்?

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலக இரட்சகராக இவ்வுலகிற்கு வந்தார். உங்களுடைய பாவங்களுக்காக மரிப்பதற்கென்று தாழ்மையின் கோலம் எடுத்தாலும் அவர் உன்னதமானவர், ஈடு இணையற்றவர். அவர் கன்னியின் வயிற்றில் அற்புதமாகப் பிறந்தார்.

அவருடைய வாழ்க்கையைப் பற்றி அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே அறிவிக்கப் பட்டிருந்தது. 250-க்கும் அதிகமான இப்படிப்பட்ட தெய்வீக முன் கூற்றுகள் (தீர்க்கதரிசனங்கள்) அப்படியே நிறைவேறியுள்ளதை நாம் வேதாகமத்தில் படிக்கிறோம்.

அவர்(இயேசு) பாவம் செய்யாதவராக, முற்றிலும் பரிசுத்தராக வாழ்ந்தார். தன்னுடைய வார்த்தையிலும், வாழ்க்கையிலும், செயல்களிலும் தெய்வத்தின் தன்மையையும், வல்லமையையும் அவர் வெளிப்படுத்தினார்.

வியாதிகளினால் தவித்த மக்களை அவர் குணமாக்கினார். குருடர்களுக்குப் பார்வை அளித்தார். செவிடர்களைக் கேட்கச் செய்தார். ஊமையரைப் பேசவைத்தார், முடமானவர்களை நடக்கச் செய்தார். பிசாசின் பிடியில் வேதனை உற்றவர்களை விடுவித்தார். மரித்தவர்களையும் உயிருடன் எழுப்பினார். பரிசுத்தமாக வாழ்வதற்குரிய சத்தியங்களை உபதேசித்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இயற்கை சக்திகளையும் கட்டுப் படுத்துகின்ற, மாற்றுகின்ற சர்வ வல்லமை உடையவராக, அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். 2000 ஆண்டுகளுக்கு முன்பாகத் தற்போது **'இஸ்ரேல்'** என்று அழைக்கப்படும் பாலஸ்தீன நாடெங்கும் நடந்து சென்று மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார்.

# இயேசுவின் மரணம்

மூன்றரை ஆண்டுகளாக இப்படி ஊழியம் செய்த இயேசு கிறிஸ்து கொல்கதா மலையில், கல்வாரி சிலுவையில் தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி, பாடுபட்டு மரித்தார். அவருடைய சொந்த மக்களான யூதர்கள் பொறாமையினால் அவர்மீது மரணத்திற்கேதுவாகக் குற்றஞ்சாட்டினார்கள். அவருடைய மரணம் ஏதோ அகால மரணமன்று. திடீரென்று அவர்கள் அவரைக்கொன்று விடவில்லை. அவருடைய மரணம் ஒரு சாதாரண மரணமன்று. தெய்வத்தின் நித்திய திட்டத்தில் அவருடைய மரணம் நியமிக்கப்பட்டிருந்தது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவினுடைய மரணத்தைக் குறித்து முன்னறிவிக்கப்பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டில் மட்டும் சுமார் 120 முறைகளுக்கு அதிகமாக அவருடைய மரணத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

‘நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்’ என்று சொன்ன ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே நமக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார். ‘நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறேன்’ என்று இயேசு சொன்னார். (யோவான் 10 :11, 17)

உலக மக்களின் பாவத்திற்கான பிராயச் சித்த பலியாக இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தார். இயேசுவின் மரணம் தேவன் நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்துகிறது. பாவத்தின் காரணமாக தேவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த பகைமையின் நிலையை மாற்றி, சமாதானத்தை உண்டுபண்ண இயேசு மரித்தார். மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு இயேசு மரித்தார்.

ரோமர் 5:8; 6:10; 8:34; I கொரிந்தியர் 15:3,4
II கொரிந்தியர் 5:15

## இயேசுவின் உயிர்த்தெழுதல்

மற்ற மகாத்துமாக்களைப் போல் மரணத்தோடு அவருடைய சரித்திரம் முடிந்துவிடவில்லை. அடக்கம் பண்ணப் பட்டு, மூன்றாம் நாள் மரித்தோரில் இருந்து அவர் உயிருடன் எழுந்தார். மரணம் அவரை ஆண்டுகொள்ளவில்லை. கல்லறையின் கல், கர்த்தர் இயேசுவினுடைய உயிர்த் தெழுதலின் வல்லமையின் காரணமாகப் புரண்டோடியது. அவர் முன்னமே சொல்லி யிருந்தபடி மூன்றாம் நாள் மரணத்தை வென்றவராக உயிர்த்தெழுந்தார்.

பயந்து ஒளிந்து கொண்டிருந்த அவருடைய சீடர்கள், உயிர்த்தெழுந்த தங்கள் ஆண்டவரைச் சந்தித்தபோது உற்சாகம் அடைந்தார்கள். புது உணர்வைப் பெற்றார்கள். வாழ்க்கையில் மாற்றத்தையும், மகத்தான தைரியத்தையும், துணிவையும் பெற்றார்கள்.

ஐந்நூறுக்கும் அதிகமான சகோதரர்களும், சீடர்களும் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தரிசித்தார்கள். உயிர்த்தெழுந்த பின் 40 நாட்கள் அவர் தம்முடைய சீடர்களுடன் இருந்தார். கடைசியாகச் சில முக்கியமான கட்டளைகளை அவர் தம் சீடர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே விண்ணுலகிற்குச் சென்றார்.

அவர் எப்படி எழுந்தருளிச் சென்றாரோ அந்த விதமாக யாவரும் பார்க்கும் வகையில் மீண்டும் இந்த உலகத்திற்குத் திரும்பி வருவார். மிக விரைவில் அவர் மீண்டும் வரவிருக்கிறார்.

அவருடைய சீடர்களில் ஒருவரான தோமா உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைக் குறித்து சந்தேகம் கொண்டிருந்தார். ஆனால் அவர் தன் கைகளினால் இயேசுவினுடைய காயத்தழும்புகளைத் தொட்டுப் பார்த்தபோது, தன் சந்தேகத்தைப் போக்கிக் கொண்டார்.

அந்த அப்போஸ்தலனாகிய தோமா 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்க நம்முடைய நாடாகிய இந்தியாவிற்கு வந்தார்.

நான்கு சுவிசேஷங்களிலும் கீழ்க்காணும் அதிகாரங்களில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.






புதிய ஏற்பாட்டில் பக்க எண்

| | |
|---|---|
| மத்தேயு 28 | (46, 47) |
| மாற்கு 16 | (74, 75) |
| லூக்கா 24 | (122, 123) |
| யோவான் 20, 21 | (158-160) |

## இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார்!

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபோது பாவத்தைப் போக்குவதற்காக கிருபை நிறைந்த இரட்சகராக வந்தார். இரண்டாம் முறை அவர் வரும்போது நீதியுள்ள நியாயாதி பதியாக அவர் வரப்போகிறார். இப்பொழுது நாம் கிருபையின் காலத்தில் வாழ்கிறோம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு கிருபையின் காலம் முற்றுப் பெற்றுவிடும்.

எல்லாக் கோத்திரத்தாரும், மக்களும் காணும்படி இயேசு கிறிஸ்து வரப் போகின்றார். இயேசு கிறிஸ்துவின் வருகை இரண்டு கட்டங்களில் அடைந்திருக்கும். முதலாவது ஆண்டவராகிய இயேசு மத்தியவானில் வரும்போது அவரை ஏற்றுக்கொண்டு அவரைச் சந்திக்க ஆயத்தமாய் வாழ்பவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

இம்மாபெரும் நிகழ்ச்சிக்கு முன்பாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் இந்நிகழ்ச்சி **'இயேசுவின் இரகசிய வருகை'** என்று சொல்லப்படுகிறது.

இந்நிகழ்ச்சிக்குப்பின் ஏழு ஆண்டுகள் இவ்வுலகில் கொடுந்துன்ப நாட்களாக இருக்கும். முக்கியமாக யூத மக்களுக்கும், மற்றுமெல்லோருக்கும் இந்த ஏழு ஆண்டுகளும் மிகவும் பயங்கரமான கொடிய காலமாக இருக்கும். இந்த நாட்களில் தான் அந்திக் கிறிஸ்து என்பவன் வெளிப்படுவான். ஏழு ஆண்டின் முடிவில் ஆண்டவராகிய இயேசு பகிரங்கமாய் வெளிப்படுவார்.

அதையடுத்து 1000 வருட அரசாட்சி நடைபெறும். அதற்குப் பின்பு வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு உண்டு. இந்த உண்மைகளை விளக்கும் வேத பகுதிகளை அடிக்கடி நீங்கள் வாசிக்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கும் நீங்கள் அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப் பட்டு அவரை சந்திக்க ஆயத்தத்துடன் பரிசுத்தமாக வாழ வேண்டும்.




**இதோ சீக்கிரமாய் வருகிறேன்! - இயேசு**

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; - I தெசலோனிக்கேயர் 4 : 16

# ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஈடு இணையற்றவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறப்பில், வளர்ப்பில் ஈடு இணையற்றவர். இயேசு கிறிஸ்து உபதேசத்திலும் ஊழியத்திலும் தன்னிகரற்றவர். அவரது சிலுவைப்பாடு மரணம் ஒப்பிடமுடியாத ஒன்றாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலிலும் ஈடு இணையற்றவர். இன்றைக்கும் ஆண்டவராகிய இயேசு நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவரை நாம் அனுதினமும் ஆராதிக்க வேண்டும். அவருக்காக நம்மை அர்ப்பணித்து வாழ வேண்டும்.

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான இயேசு கிறிஸ்து வானங்களில் உயர்ந்தவருமாயிருக்கிறார்.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையான இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரென்று நாவுகள் அறிக்கை பண்ணும் படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். மனிதனுடைய பாவங்களை மன்னிக்க இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே அதிகாரமுண்டு. அவர் ஆரம்பமும் முடிவும் இல்லாதவர்.



## கீழ்க்கண்ட வசனங்களை வாசித்துப் பாருங்கள்!

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். **(303)**

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,... **(271)**

பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்... **(49)**

அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக... **(338)**

மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிற வராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். **(303)**

**(அடைப்புக்குறிக்குள் கொடுக்கப் பட்டவை புதிய ஏற்பாட்டின் பக்க எண்)**

எபிரெயர் 7:26; பிலிப்பியர் 2:9; மாற்கு 2:10; வெளி 5:13; எபிரெயர் 7:25



## நீங்கள் யார்?

நீங்கள் யார்? இது ஒரு குறிப்பான தெளிவான தனிப்பட்ட கேள்வி. இதற்குப் பதில் சொல்லும் வகையில் நீங்கள் உங்கள் பெயரையும், வேலையையும் ஒரு வேளை சொல்லலாம். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துப் பின்பற்றுகிறவர்கள் தாங்கள் யார் என்று அறிந்திருக்க வேண்டும்.

ஒருவன் பள்ளிக்கூடத்தில் படிக்க சேரும் போது அந்தக் குறிப்பிட்ட பள்ளியின் மாணவன் அல்லது மாணவி என்ற பெயரைப் பெறுகிறான்.ஒரு வேலையில் சேரும்போது அந்த வேலைத் தகுதியைப் பொறுத்து அழைக்கப்படுகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர் களுக்குப் புதிய தகுதி கொடுக்கப்படுகிறது. அதை விளக்க பல பெயர்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளன. அதில் **மூன்று பெயர்களை** மட்டும் சிந்திப்போம்.

1. தேவனுடைய பிள்ளைகள்
2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள்
3. கிறிஸ்தவர்கள்

### 1. தேவனுடைய பிள்ளைகள்!

தேவாதி தேவனை, பிதா அல்லது தகப்பன் என்று பரிசுத்த வேதாகமம் விளக்குகிறது. இந்த உலகத்தில் வாழும் எல்லோருமே தேவனுடைய பிள்ளைகளாகிவிட முடியாது. யார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் **தேவனுடைய பிள்ளைகள்** என்ற தகுதியையும், பெயரையும் பெறுகிறார்கள்.

நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருப் பீர்கள் என்றால் பிதாவாகிய தேவனை அப்பா, பிதாவே என்று உரிமையோடு அழைக்கலாம்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட வர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி , அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

(யோவான் 1 : 12)

அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். (ரோமர் 8 : 15)





## 2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள்!

**சீஷன்** என்றால் **பின்பற்றுகிறவன்** அல்லது **கற்றுக்கொள்ளுகிறவன்** என்று பொருள். விசுவாசிகள் தொடர்ந்து கற்றுக்கொள்ளுகிற வர்களாயும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயும், இருக்க வேண்டும். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து...**

நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் **சீஷராயிருப்பீர்கள்.**

என்னிடத்தில் **கற்றுக்கொள்ளுங்கள்.**

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் **பின்செல்லாதவன்** எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்.

நீங்கள் **மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்** என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷரா யிருப்பீர்கள். **என்று போதித்தார்.**

நீங்கள் சீஷத்துவத்தின் பாதையில் அனுதினமும் முன்னேறவேண்டும்.

---

யோவான் 8 : 31; மத்தேயு 11 :29; லூக்கா 14:27; யோவான் 15:8

## 3. கிறிஸ்தவர்கள்!

**கிறிஸ்தவன்** என்றால் **கிறிஸ்துவுக்கு உரியவன், கிறிஸ்துவை உடையவன்** என்று பொருள். நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டிருப்பதினால் கிறிஸ்துவை உடையவர்களாய் இருக்கிறீர்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைத் தனக்கென்று சொந்தமாக்கிக் கொண்டபடியால் நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களாயிருக்கிறீர்கள். பெயர் அளவிலே அல்லது பிறப்பிலேயே ஒரு வேளை நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கலாம். ஆனால் மனந்திரும்புதலின் அடிப்படையிலே மறுபிறப்பின் காரணமாக நீங்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதே சரியானது. நீங்கள் உண்மைக் கிறிஸ்தவர்களாக ஒவ்வொரு நாளும் வாழ ஜெபியுங்கள், தீர்மானியுங்கள்.

அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

அப்போஸ்தலர் 11 : 26

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறவர்கள் விட்டுவிட வேண்டியவைகள்!**

ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் இயேசு கிறிஸ்துவையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். வீட்டில் இருந்தாலும் வெளியில் சென்றாலும், வேலை செய்தாலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய எண்ணங்களினால் உங்கள் உள்ளம் நிறைந்திருக்க வேண்டும். எதைச் செய்வதற்கு முன்னும் ஆண்டவராகிய இயேசுவுக்கு விருப்பம் இருக்குமா என்று யோசிக்க வேண்டும், அவர் விரும்பாத எல்லா வழிகளையும், வழக்கங்களையும் வழிபாடுகளையும் வெறுத்துவிட வேண்டும்; விட்டுவிட வேண்டும்.

பீடி, பொடி, வெற்றிலை, புகையிலை, சிகரெட், சுருட்டு, குடி, சிற்றின்பம், சூதாட்டம், தவறான முறைகள் போன்ற கெட்ட பழக்கங்களையும் மற்றும் வேறு கொடிய பழக்கங்களையும் நீங்கள் அறவே ஒழித்து விட வேண்டும். மனதிற்குள்ளே தோன்றும் கோபம், பயம், எரிச்சல், வெறி, அகங்காரம், அகம்பாவம், வெறுப்பு, சந்தேகம், கவலை, கசப்பு, முறுமுறுப்பு, பெருமை, இச்சை போன்ற எண்ணங்களை ஆண்டவருடைய கிருபையால் விட்டுவிட வேண்டும்.

பொய், புரட்டு, கெட்டவார்த்தை, பரிகாசம், புறம்கூறுதல், வீண் வார்த்தைகள் போன்றவைகள் இல்லாமல், துதியும் ஸ்தோத்திரமும் எப்போதும் உங்கள் நாவில் இடம் பெறவேண்டும். ஒரு தடவை கூட பழைய பாவ பழக்கங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. உங்களுடைய பெலத்தால் பரிசுத்தமாக வாழமுடியாது.

ஆனால் 'என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன்உண்டு' என்ற வசனத்தின்படி அவருடைய பெலத்தைப் பெற்று நீங்கள் பரிசுத்தமாக வாழ முடியும். அப்படி நீங்கள் வாழ வேண்டும்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. - II கொரிந்தியர் 5:17

ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். யாக்கோபு 1:21

## ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றுபவர்கள் செய்ய வேண்டியவை:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் வெறுத்து விட்டு விட வேண்டிய பழக்கவழக்கங்கள், பழைய தொடர்புகள் பல உண்டு. கெட்ட பழக்கங்களை விட்டுவிடுவது **'மனந்திரும்புதல்'** என்ற அனுபவத்தில் ஒரு பகுதிதான். சரியான பழக்கங்களை, புதிய ஒழுங்குகளை கற்றுக் கொண்டு கடைபிடிப்பதும் முக்கியமானதாகும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறவர்கள் செய்ய வேண்டிய **4 செயல்கள்** கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(1) பயிரிடுங்கள்**

**(2) பெற்றுக்கொள்ளுங்கள்**

**(3) பறைசாற்றுங்கள்**

**(4) பயன்படுத்துங்கள்**

## 1 பயிரிடுங்கள்:

நிலத்தை உழுது பயிரிடாவிட்டால் களைகள் முளைத்து விடும். ஆனால் உழுது விதை விதைத்து பயிர் செய்யும் போது நல்ல பலனைப் பார்க்க முடியும். நம் உள்ளம் நிலத்தைப் போன்றது. நிலத்தை அடிக்கடி பண்படுத்தி களையெடுத்து உழுது பயிர் செய்வதைப் போல நம்முடைய உள்ளத்தையும் அடிக்கடி பண்படுத்த வேண்டும். நல்ல மழை பெய்தவுடன் நிலங்களை உழுவதைப் பார்த்திருப்பீர்கள்.

ஆவியானவர் பல சமயங்களில் எழுப்புதலான மழையை அனுப்புவார். ஆவிக்குரிய கூட்டங்களிலும் ஞாயிற்றுக் கிழமை ஆராதனைகளிலும், ஜெப வேளைகளிலும், நாம் ஆவியின் மழையைப் பெறுகிறோம்.

அதைத் தொடர்ந்து நாம் வசனங்களை நன்றாகப் படித்து வேதாகம வசனங்களை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து வசனங்களைத் தியானிக்க வேண்டும். அப்படி விசுவாசத்தோடு செயல்படும்போது, வாழ்க்கையில் பரிசுத்தத்திற்கு ஏற்ற ஆவிக்குரிய கனிகளும், நீதியின் விளைச்சலும் காணப்படும்.



## 2 பெற்றுக்கொள்ளுங்கள்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் விசுவாசியாகும் போது பரிசுத்த ஆவியான வர் உள்ளத்தில் வந்து வாசம் செய்கிறார். பரிசுத்த ஆவியானவரின் நிறைவு அல்லது அபிஷேகம் என்பது இரட்சிப்பின் அனுபவத்தைப் போல மற்றுமொரு ஆவிக்குரிய அனுபவமாகும். விசுவாசிகள் யாவருக்கும் தேவன் கிருபையாக இதைத் தந்தருளுகிறார்.

விசுவாசிகள் பரிசுத்தமாய் பாவத்தின் மேல் வெற்றி கொண்டு வாழவும் வல்லமையுடன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழவும் இந்த அனுபவம் தேவையான ஒன்றாகும்.

விசுவாசத்தோடும், தாகத்தோடும், கீழ்ப்படிதலோடும் ஆண்டவருக்கு உங்களை ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை நிரப்புவார்.

(அப்போஸ்தலர் 1 : 8, 2 : 38 லூக்கா 11 : 13)

இந்த அனுபவம் ஏதோ ஒருமுறை கிடைத்து விட்டால் முடிந்துவிடுவதில்லை. நான் பரிசுத்த ஆவியைப் பெற்று விட்டேன் என்று நீங்கள் திருப்தி அடைந்து விடக் கூடாது. தொடர்ந்து ஆவியானவருடைய ஆளுகைக்குள் நீங்கள் வாழவேண்டும்.





## 3 பறைசாற்றுங்கள்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொரு விசுவாசியும் அவரைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதைப்பற்றி வெட்கமும், தயக்கமும் கொள்ளத் தேவையில்லை. இயேசு கிறிஸ்துவுக்காகச் சாட்சியாக வாழ்வது அவரைப் பற்றி நாம் பேசுவதற்கு நமக்கு தைரியத்தையும், தெளிவையும் கொடுக்கிறது.

நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி தனிப்பட்ட வாழ்க்கையில் அறிந்திருப்பதைச் சொல்லி நற்செய்தி உரையாடலை ஆரம்பிக்கலாம். கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் செய்த அற்புதங்களை மற்றவர்களிடம் சொல்லும்போது அவர்கள் கருத்தாய் கவனித்துக் கேட்பார்கள்.

இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் **அவர்களுக்கு அறிவியென்று** சொன்னார்.

- மாற்கு 5 : 19

நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் (இயேசுவுக்கு) **சாட்சியாயிருப்பாய்.** -அப்போஸ்தலர் 22 : 15



## 4 பயன்படுத்துங்கள்:

நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைய வேண்டும், முன்னேற வேண்டும், பலன் தர வேண்டும், பயன்பட வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். அதற்கென்று பல உதவியான வாய்ப்புகளை, கிருபைகளை ஆண்டவர் கொடுத்திருக்கிறார். அவைகளை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

### பரிசுத்த வேதாகமம் :

இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் முக்கியமான அன்பளிப்புகளில் ஒன்றாகும். பரிசுத்த வேதாகமத்தைக் கருத்துடன் வாசித்து, கவனமாக யோசித்து, வேதத்தின் சத்தியங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். வேதத்தை வாசிப்பதற்கு அட்டவணையும் தியானக் குறிப்புகளும் எங்களிடத்தில் உண்டு, தேவையானால் எழுதுங்கள்.

**விசுவாசிகளின் ஐக்கியம் :**

ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் வளர்ச்சி அடைவதற்கு மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்வது மிகவும் அவசிய மானதாகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே உள்ள விசுவாசிகளோடு தொடர்பு கொண்டு அடிக்கடி அவர்களுடன் சேர்ந்து ஜெபியுங்கள். உங்கள் வீட்டினருகே உள்ள வீட்டு ஜெபக் குழுக்களில் கலந்து கொள்ளுங்கள்.

**கிறிஸ்தவ சபை :**

ஞாயிற்றுக்கிழமை தோறும் தவறாமல் சபைக்குச் சென்று ஆண்டவராகிய இயேசுவை ஆராதியுங்கள். பாஸ்டரைச் சந்தித்து ஜெபியுங்கள். சபையின் கூட்டங்களில் மற்றும் ஆவிக்குரிய சுவிசேஷ கூட்டங்களில் உற்சாகமாய் கலந்துகொள்ளுங்கள்.

# குறிப்புகளை எழுதிக்கொள்ளுங்கள்



# தேவனை நோக்கி

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் சங்கீதம் 50 :15

ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். சங்கீதம்86 : 5

அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை சங்கீதம் 34:5

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். எரேமியா 33 :3

## முக்கிய ஆலோசனைகள்!

இயேசுவை நோக்கி உங்கள் ஆவிக்குரிய பயணத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள், தொடர்ந்து நீங்கள் முன்னேற வேண்டும். ஒவ்வொருநாளும் உங்களைப் பாவஞ் செய்யவைக்கும் தூண்டுதல்களும் நீங்கள் பரிசுத்தத்திற்குரியவைகளைச் செய்வதற்கான தடைகளும் வரலாம். இந்த சோதனைகள் வரும்போது நீங்கள் **இடம் கொடுக்காதீர்கள்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் பின்பற்றும்போது பல நெருக்கங்களும் பிரச்சனைகளும் வரலாம். **சோர்ந்து போகாதீர்கள்.**

சில சமயங்களில் உங்களுடைய ஆவிக்குரிய அனல்குன்றி ஆவிக்குரிய வளர்ச்சியில் அப்படியே நின்றுவிடலாம். **பின்வாங்காதீர்கள்.** பின்வாங்குதலைக் குறித்து முன்னெச்சரிக்கை யுடன் இருங்கள். ஒவ்வொருநாளும் ஆண்டவர் உங்களுக்குப் புதிய கிருபைகளைக் கொடுத்து, புதிய பெலனைக் கட்டளையிட்டு புதிய வழிகளில் நடத்துவார். உங்களை வழுவாதபடி காக்க அவர் வல்லவர். நிலைத்திருங்கள், தொடர்ந்து முன்னேறுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



## சுவிசேஷ பிரதிகள்!

| | |
|---|---|
| BL. 1 | இயேசு கிறிஸ்து |
| BL. 2 | மனந்திரும்புங்கள் |
| BL. 3 | இயேசுவை நோக்கி |
| BL. 4 | பாவம் |
| BL.18 | இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்? |
| BL.19 | அனுதின ஜெபங்கள் - 7 |
| BL.20 | இயேசு தங்கும் வீட்டில் |






| ஜெபிப்பதற்கும், துதிப்பதற்கும் உதவியானவை | |
|---|---|
| BL.24 | ஆண்டவராகிய இயேசுவே! இன்றைக்கு.... |
| BL.30 | திரியேக தேவனைத் துதிப்போம்! |
| BL.23 | கர்த்தரைக் கருத்துடன் துதிப்போம்! |
| BL.29 | தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்! |

| பரிசுத்த வேதாகமத்தை தியானிக்க உதவியானவை! | |
|---|---|
| BL. 8 | பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பது எப்படி? |
| BL.10 | பரிசுத்த வேதாகமம் |
| BL.25 | பரிசுத்த வேதாகமத்தை ஆராய்வது எப்படி? |
| BL.38 | பரிசுத்த வேதாகமத்தை ஆராயும் முறைகள் - 7 |

# பரிசுத்த வேதாகமத்தின் 66 புத்தகங்களுக்கான அறிமுகம்!

| | |
|---|---|
| OT 1 | சரித்திரப் புத்தகங்கள் |
| OT 2 | சங்கீதப் புத்தகங்கள் |
| OT- 3 | தீர்க்கதரிசன புத்தகங்கள் |
| NTI | புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களுக்கான அறிமுகம் |
| BL.16 | பழைய ஏற்பாடு ஓர் அறிமுகம்! |
| BL. 7 | புதிய ஏற்பாடு ஓர் அறிமுகம்! |

## விசுவாசி வளர.....

| | |
|---|---|
| BL. 5 | விசுவாசி வளர அடிப்படைத் தேவைகள் |
| BL. 9 | ஞானஸ்நானம் |
| BL.15 | இரட்சிப்பு |

தொலைபேசி வாயிலாக வேதத்தை நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பினால் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

**Bank details :**

A/c Name : Follow-up Ministries Trust,

A/c No : S/B A/C 0506301 00000 2311

Bank : Lakshmi Vilas Bank,

Branch : Oddanchatram

IFSC code -.LAVB - 0000 506


**நீங்கள் எழுதவேண்டிய முகவரி:**
**பின் தொடர்பணி, காந்திநகர் கிழக்கு,**
**ஒட்டன்சத்திரம் - 624 619**
**04553 - 240623, 89030 11350**
**E - mail : selwynde@gmail.com**


**BL. 3** **September 2016**

©Follow-up Ministries Trust,
Oddanchatram - 624 619

# அனுதினமும் அடிக்கடி நீங்கள் செய்ய வேண்டிய ஜெபம்

கண்மணியைப் போல
என்னைக் காத்தருளும்.

உம்முடைய செட்டைகளின் நிழலிலே
என்னைக் காப்பாற்றும்.

உம்முடைய கரத்தினால்
என்னைத் தப்புவியும்.

மறைவான குற்றங்களுக்கு
என்னை நீங்கலாக்கும்.

துணிகரமான பாவங்களுக்கு
என்னை விலக்கிக் காத்தருளும்.

தேவனே ஒரு அநியாயமும்
என்னை ஆளவொட்டாதேயும்.

சங்கீதம் *17 :8,9,14;*
*19 : 12, 13; 119 :133*



# இயேசுவை நோக்கி

அழகான ஆழமான இந்த இரண்டு வார்த்தைகளும் கிறிஸ்தவ வாழ்க்கையை விளக்கக்கூடிய வார்த்தைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு திட்டவட்டமான ஒரு ஆரம்பம் உண்டு. நீங்கள் ஒருவேளை கிறிஸ்தவ வாழ்க்கை என்ற பிரயாணத்தை ஆரம்பித்திருக்கலாம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், நீங்கள் யார்? உங்கள் பொறுப்புகள் யாவை? என்பதைப் பற்றியும் இப்புத்தகப் பிரதி விளக்குகிறது. இப்புத்தகப் பிரதியை ஒருமுறை வாசித்து வைத்து விடுவதைக் காட்டிலும் பலமுறை வாசித்து கருத்துக்களைத் தியானிப்பதே சாலச்சிறந்தது.

**F.U.L. Series B.L.No.3**

பின்தொடர்பணி, காந்திநகர் (கிழக்கு),
ஒட்டன்சத்திரம் - 624 619
© 04553 - 240623, 89030 11350
E-mail : selwynde@gmail.com
Subhi Printers, . © 9842109368